## அருகதையற்ற அரசின் அவதூறு!

பத்தாண்டு கால மோடியின் ஆட்சியில் சொல்லத்தக்க சாதனைகள் எதுவுமில்லை என்பதால், இந்தியா கூட்டணிக் கட்சிகள் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளையும் அவதூறுகளையும் முன்வைத்து வருகிறார் பிரதமர் மோடி. ஆனால், தேர்தல் களத்தில் மோடி எந்த ஆயுதத்தை எடுத்தாலும், அது அவருக்கு எதிராகவே திரும்பிவிடுகிறது.

பா.ஜ.க.வின் எல்லாக் கணைகளும் முனை முறிந்துபோனதால், சம்பந்தமே இல்லாமல் கச்சத்தீவுப் பிரச்சினையைக் கையில் எடுத்துக் காற்றில் கத்தி சுழற்றுகிறது பா.ஜ.க. ‘1974-இல் கச்சத்தீவை இலங்கைக்கு மத்திய அரசு தந்தபோது தி.மு.க. எதிர்ப்புத் தெரிவிக்காமல் துரோகம் செய்தது’ என்று ஒரு பொய்யை அவிழ்த்துவிட்டிருக்கிறது.

கச்சத்தீவுப் பிரச்சினையில் தி.மு.க. மீது பழிபோடும் மோடியின் ஆட்சியில்தான் இந்திய எல்லைக்குள் சீனா பல கிலோமீட்டர் அத்துமீறி நுழைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. நுழைந்தது மட்டுமல்ல, அருணாச்சல பிரதேசத்தில் உள்ள ஊர்கள், மலைகளுக்கு சீன மொழிப் பெயர்களையும் சீன அரசு சூட்டியுள்ளது. அருணாச்சல பிரதேசத்தில் இருக்கும் 11 குடியிருப்புப் பகுதிகள், 12 மலைகள், 4 ஆறுகள், ஒரு ஏரி, ஒரு மலைப்பாதை என பல இடங்களுக்கு சீன மொழியின் எழுத்துகளிலும், திபெத்திய மொழியிலும் புதிய பெயர்கள் சூட்டி இருப்பதாக சீனாவில் இருந்து வெளிவரும் ‘சைனா மார்னிங் போஸ்ட்’ அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

ஏற்கெனவே, மோடியின் பத்தாண்டு கால ஆட்சியில் 2017, 2019, 2021-இல் அருணாச்சலப் பிரதேசப் பகுதிகளுக்கு, சீன மொழிப் பெயர்களைச் சூட்டியுள்ள சீன அரசு, இப்போது நான்காவது முறையாக சீனப் பெயர்களைச் சூட்டியுள்ளது. தன் ஆட்சிக்காலத்தில் சீன அத்துமீறலையே தடுக்க முடியாத மோடிக்கு,கச்சத்தீவுப் பிரச்சினை பற்றிப் பேச என்ன தார்மீகத் தகுதியிருக்கிறது என்கிற கேள்வியைக் கேட்கின்றனர் மக்கள்.

## ஃப்ளாஷ்பேக்



என்.கே.ஆர்.சூர்யகுமார்



### நாயகருடன் நாட்றம்பள்ளியார்!

எனது தந்தையார் என்.கே.ராஜா திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி பகுதியில் கழக முன்னோடியாக விளங்கியவர். எனது சிறு வயதில் தலைவர் கலைஞர், இளைஞர் அணிச் செயலாளராக இருந்த தளபதி, கழக முன்னோடிகள் ப.உ.சண்முகம், நாவலர், பேராசிரியர், ஆற்காட்டார், வீரபாண்டியார், தற்போதைய பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் ஆகியோரை அழைத்து வந்து கழகக் கொடி ஏற்றி, பொதுக் கூட்டங்களை நடத்தியுள்ளார்.

கழகத்தின் சார்பில், சட்டமன்ற வேட்பாளராக மூன்று முறை போட்டியிட்டவர். இந்தப் புகைப்படம் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்முறையாக முதலமைச்சரான பின்னர், 1970-ஆம் ஆண்டில் அவரது பிறந்தநாளின் போது கோபாலபுரம் இல்லத்தில் எடுக்கப்பட்டது. புகைப்படத்தில் திராவிடர் கழக முன்னோடிகளுடன், எனது தந்தையார் என்.கே.ராஜா இடது ஓரத்தில் இருப்பவர்.

**-என்.கே.ஆர்.சூர்யகுமார், முன்னாள் எம்.எல்.ஏ, ஒன்றிய கழகச் செயலாளர், நாட்றம்பள்ளி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் விளையாட்டு!

1967-இல் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், சிறந்த திரைப்பட உரையாடல் ஆசிரியருக்கான விருதை கலைஞருக்கு அறிவித்தது. மேடையில் பேரறிஞர் அண்ணாவிடம் விருது வாங்க கலைஞர் சென்றவுடன், விருது மாலையைத் தானே அணிந்துகொண்டார் அண்ணா. அரங்கமே கரவொலியால் அதிர்ந்தது. பின்னர் மீண்டும் மாலையை கலைஞருக்கு அணிவித்தார். ‘நான் வேறு, தம்பி கலைஞர் வேறல்ல’ என அண்ணா சொல்வதுபோல் அமைந்தது அந்நிகழ்வு.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 5

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

அம்பேத்கருடன் சாகு மகாராஜ்



## முறிந்தது ஆதிக்கத்தின் முதுகெலும்பு!

19-ஆம் நூற்றாண்டில் மகாராஷ்டிரா மாநிலம் மகாத்மா ஜோதிராவ் ஃபூலேவின் சமூகநீதிப் போராட்டங்களால் பண்படுத்தப்பட்ட மண்ணாக மாறியிருந்தது.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மராத்திய மண்ணின் பேசுமொழியாக மாறியிருந்த மறுமலர்ச்சிக் காலத்தில் யஷ்வந்த்ராவ் காட்கேவாக 1874-இல் பிறந்து, அடுத்த 28 ஆண்டுகளுக்கு கோல்ஹாப்பூர் சமஸ்தானத்தின் மன்னராக ஆண்ட சத்திரபதி சாகு மகாராஜ், 48 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்தார். ஆனால், அவர் தனது வாழ்நாளில் ஆதிக்கத்தின் முதுகெலும்பை முறித்த மாவீரனாகத் திகழ்ந்தார். அவருடைய ஆட்சியும் சிந்தனையும் செயல்பாடுகளும் இன்றளவுக்கும் இந்தியாவுக்கு வழிகாட்டுகின்றன. இப்படிப்பட்ட பெருமைகொண்ட மராட்டிய மண், தீண்டத்தகாத மக்களுக்கு கொடுங்கனவாகவே இருந்தது.

குறிப்பாக, பேஷ்வாக்கள் ஆட்சியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சொல்லொண்ணாத் துயரங்கள் நிகழ்த்தப்பட்டன. அன்றைய பேஷ்வாக்களின் ஆட்சியில் ஒரு தெருவில் உயர்சாதி இந்து நடந்து வந்தால், அவர்மீது தீண்டத்தகாத சாதியைச் சேர்ந்தவரின் நிழல் பட்டுத் தீட்டாகிவிடும் என்பதால், அந்தத் தெருவில் நடக்க தீண்டத்தகாத மக்களுக்கு அனுமதியில்லை. இந்துக்கள் தவறுதலாகத் தீண்டத்தகாத மக்களைத் தொட்டுவிட்டாலும் தீட்டாகிவிடும் என்பதால், தீண்டத்தகாத மக்கள் தங்கள் கழுத்திலோ அல்லது கைகளிலோ கறுப்புக் கயிற்றை அடையாளமாகக் கட்டிக்கொள்ள வேண்டும்.

### கழுத்தில் கலயம்

பூனாவில் தீண்டத்தகாதவர் தன்னுடைய இடுப்பில் விளக்குமாறு ஒன்றைக் கட்டி, தான் நடந்து போகும் பாதையைக் கூட்டிப்பெருக்கிக் கொண்டே செல்லவேண்டும். அதே தெருவில் நடக்கும் உயர்சாதி இந்து தீட்டாகிவிடுவார் என்பதால், இந்த ஏற்பாடு. மேலும் தீண்டத்தகாதவர் பூனாவில் எங்கு சென்றாலும், தங்கள் கழுத்தில் ஒரு மண்பானையைத் தொங்கவிட்டுக்கொண்டு செல்லவேண்டும். அந்தப் பானையில் தன்னுடைய எச்சிலைத் துப்பிக்கொண்டே செல்லவேண்டும். இல்லையெனில், தரையில் விழும் தீண்டத்தகாதவரின் எச்சிலைத் தப்பித்தவறி மிதித்துவிட்டாலும் தீட்டாகிவிடும். இந்தப் பின்னணியில்தான் யஷ்வந்த்ராவ் காட்கே சத்திரபதி சாகு மகாராஜாவாக மாறுகிறார்.

**பாலகங்காதர திலகர் உள்ளிட்ட உயர்ஜாதியினர் சாகு மகாராஜை கோலாப்பூரின் மன்னராக அறிவித்ததை எதிர்த்தனர். ஆனால், சாகு மகாராஜ் எதற்கும் அஞ்சவில்லை.**

வீரசிவாஜியின் வாரிசான மூன்றாம் சிவாஜி என்பவருக்கு, ஆண் வாரிசு இல்லாமல் போகவே, அரச குடும்பத்தைச் சேர்ந்த சாகிப் காத்தே என்பவரின் மகன் யஷ்வந்த்ராவ் என்ற 10 வயது சிறுவனைத் தத்தெடுத்த அரச குடும்பத்தினர் அவருக்கு முடிசூட்டி, சாகு மகாராஜ் என்ற பட்டத்தை அளித்தனர். இதை ஆங்கில அரசு ஏற்றுக்கொண்டது. பாலகங்காதர திலகர் உள்ளிட்ட உயர்ஜாதியினர் சாகு மகாராஜை கோலாப்பூரின் மன்னராக அறிவித்ததை எதிர்த்தனர். ஆனால், சாகு மகாராஜ் எதற்கும் அஞ்சவில்லை.

1894-இல், கோலாப்பூர் அரசின் முழு ஆட்சிப்பொறுப்பை 20 வயதாகிய சாகு மகாராஜ் ஏற்றுக்கொண்ட போது, கோலாப்பூர் அரசின் உயர் அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 71. அதில் 60 பேர் பிராமணர்கள். சாகு மகாராஜ் இறக்கும்போது (1922) அவருடைய அரசில் பணிபுரிந்த 95 உயர் அலுவலர்களில் 36 பேர் மட்டுமே பிராமணர்கள். அதேபோல் அவருடைய ஆட்சியின் தொடக்க காலத்தில் தனியார் துறையில் உயர் அலுவலர்களாகப் பணிபுரிந்த 53 பேரில் 46 பேர் பிராமணர்கள். அவர் ஆட்சியின் இறுதியாண்டில் தனியார் துறையில் பணிபுரிந்த 152 உயர் அலுவலர்களில் 43 பேர் மட்டுமே பிராமணர்கள். பிராமணர்களின் ஏகபோகத்தை உடைத்த சாகு மகாராஜ் ஒடுக்கப்பட்ட மக்களின் தோழனாக மாறியது எப்படி?

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

**ர.பிரகாசு** 5

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : மேடி




## அஞ்சா நெஞ்சனின் கடைசி மாநாடு!

இந்திய விடுதலையில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் மாறுபட்ட நிலைப்பாட்டை எடுத்ததிலிருந்தே இருவருக்குள்ளும் ஒரு சிறு இடைவெளி ஏற்பட்டிருந்தது. ஆனால், கொள்கையிலோ, லட்சியத்திலோ இருவருக்குள்ளும் சிறு பிணக்கும் ஏற்படவில்லை. அதற்குச் சிறந்த உதாரணம், 1948-இல் (அக்.23, 24) நடைபெற்ற ஈரோடு தனி (ஸ்பெசல்) மாநாடு. அதற்கு முன்பு நடைபெற்ற தூத்துக்குடி மாநாட்டுக்கு அண்ணா வரவில்லை என்பது இயக்கத்துக்குள் ஒரு பிரளயத்தை வெடிக்கச் செய்திருந்த நிலையில், ஈரோடு மாநாடோ அண்ணாவின் தலைமையில்தான் நடைபெற்றது. ‘பெட்டிச் சாவியை அண்ணாவிடம் ஒப்படைக்கும் நேரம் வந்துவிட்டது’ என்று பெரியார் கூறியது அந்த மாநாட்டில்தான்.

**“என் உடல்நிலையைப் பார்க்கும்போது எனக்கு இதுவே கடைசி மாநாடாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன். என் தலைவன் பெரியாருக்கு இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளவே இன்று வந்தேன்”**

முதல் நாளே ஈரோடு ரயிலடி, பேருந்து நிலையம் மக்கள் வெள்ளமாய்க் காட்சியளித்தது. தொடக்கமாக, 5 மைல் தொலைவுக்கு மிகப் பிரமாண்ட ஊர்வலம் நடைபெற்றது. ஆயிரக் கணக்கான தாய்மார்கள் புடைசூழ்ந்தவாறு பெரியார் முன்னே சிம்ம நடை போட, செங்காளைகள் பூட்டப்பட்ட சாரட்டில் அண்ணா, குஞ்சிதம் அம்மையார், குருசாமி உள்ளிட்டோர் பின்னே அணிவகுத்தனர். அவர்களுக்குப் பின்னால் 20 ஆயிரம் தொண்டர்கள் வரிசைகட்டி வந்த கண்கொள்ளா காட்சியை, ஈரோட்டு மக்கள் சாலையின் இருமருங்கிலும் நின்று கண்டு ரசித்தனர்.

தலைவர்கள் மேடையை அடைந்தவுடன் கூட்டத்தின் ஆரவாரக் கூச்சல் அடங்கவே பல நிமிடங்கள் ஆயின. “திராவிட மாநாடு... வாழ்க செல்வ திருநாடு” என்ற கலைவாணரின் இன்னிசை இசைக்க, இந்திராணி பாலசுப்ரமணியம் அம்மையார் மாநாட்டுக் கொடியை ஏற்றிவைக்க மாநாடு தொடங்கியது. திராவிட சமுதாயத்தின் நிலையை ரத்தினச் சொற்களால் நறுக்கென்று எடுத்துரைத்தார், இந்திராணி அம்மையார்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி, பெரியார் காங்கிரஸில் இருந்து வெளியேறியது திரு.வி.க தலைமையில் நடந்த மாநாட்டில்தான். அதே திரு.வி.க., பெரியார் நடத்திய ஈரோடு மாநாட்டில், இந்தித் திணிப்புக்கு எதிராக இடியாக முழங்கினார்.

இந்தித் திணிப்பை வெறுக்கிறோம் என்பதை வலியுறுத்தும் விதமாக பிரதமருக்கும், ஒன்றிய கல்வி அமைச்சருக்கும் கருப்புக்கொடி காட்டுவதென இந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இரண்டாம் நாளில் சிங்காரவேலர், தியாகராயர், நாகம்மையார், தாளமுத்து, நடராசன் உள்ளிட்டோரின் படத்திறப்பைத் தொடர்ந்து, பெரியார் சுமார் ஒன்றரை மணி நேரம் விரிவான உரை நிகழ்த்தினர். பிற்பகலில் சரோஜினி-சுந்தர்ராஜன் தம்பதியின் சுயமரியாதைத் திருமணத்தோடு நிறைவு மாநாடு தொடங்கியது. அண்ணாவின் உரை, கூட்டத்தை அமைதியாக்கி உறையவைத்தது.


பட்டுக்கோட்டை அஞ்சா நெஞ்சன் அழகிரியின் உரையோ, எல்லோர் நெஞ்சையும் உருக்கிவிட்டது. “என் உடல்நிலையைப் பார்க்கும்போது எனக்கு இதுவே கடைசி மாநாடாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன். என் தலைவன் பெரியாருக்கு இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளவே இன்று வந்தேன்” என்று உருக்கமாகப் பேசினார் அழகிரி. அதன்பிறகு படுத்த படுக்கையானவர், 5 மாதங்களில் மரணத்தைத் தழுவினார்.

**...கூட்டம் திரளும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

437

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்